මගේ අංකය / எனது இல / My No: MPA/SSD/12/RECRU/9937(IV)
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.04.

**<u>இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் பதவிகளுக்கு நியமனம் செய்தல்</u>**

மேற்படி விடயத்தின் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்களில் இலங்கை விஞ்ஞான சேவையில் I ஆந் தரத்தின் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| திணைக்களம்/ அமைச்சு | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் | பணிப்பாளர் | 02 |
| வனப் பாதுகாப்புத் திணைக்களம் | வனப் பாதுகாவலர் ( பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( சமூக வனவியல் மற்றும் வன விரிவாக்கல்) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( வனவியல் மற்றும் வன நடுகை முகாமைத்துவம்) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( திட்டமிடல் மற்றும் முன்னேற்ற நிர்வாகம்) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் புவி வளங்கள்) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( வனக் கணக்கெடுப்பு மற்றும் புவியியல் தகவல்) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( பல்லுயிர் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களின் பாதுகாப்பு) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( சுற்றுச்சூழல் சுற்றுலா) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( கல்வி மற்றும் இயலளவு விருத்தி) | 01 |
| | வனப் பாதுகாவலர் ( ஆராய்ச்சி) | 01 |

02. அதற்கமைய, கீழே குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்களில் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள

உத்தியோகத்தர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்பதனை தயவுடன் அறியத்தருகிறேன்.

03. மேலும் இதற்கான விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**ஒப்பம்./ ஜீ.ஐ.டீ.சீ. விஜேசிங்க**
பணிப்பாளர்
விஞ்ஞான , கட்டடக் கலைஞர் மற்றும் தொழில்நுட்ப சேவை
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சின்
செயலாளருக்குப் பதிலாக

தொலைபேசி /தொலைநகல் இலக்கம் : 0112-695187
மின்னஞ்சல் முகவரி : pubadssd@gmail.com

## பொதுச் சேவை ஆணைக்குழு

## 1877/27 ஆம் இலக்க மற்றும் 2014.08.28 ஆந் திகதிய இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவின் கீழ் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புதல்

இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தில் வெற்றிடங்கள் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்களில் அந்தந்த பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக 1877/27 ஆம் இலக்க 2014 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள, 1996/25 மற்றும் 2016 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2006.01.01 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும், இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணத்தின்11.2 ஆம் பிரிவின் படி, 2023.05.12 ஆந் திகதிக்கு பந்தி 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கவனத்திற் கொள்ள வேண்டியவை:** நியமனத்தின் போது, இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I க்கு தரமுயர்வு பெற்றிருப்பது கட்டாயமாகும்.

01. வெற்றிடங்களின் எண்ணிக்கை:

| தொடரிலக்கம் | திணைக்களம்/ அமைச்சு | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் | பணிப்பாளர் | 02 |
| 02 | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | வனப் பாதுகாவலர் ( பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( சமூக வனவியல் மற்றும் வன விரிவாக்கல்) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( வனவியல் மற்றும் வன நடுகை முகாமைத்துவம்) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( திட்டமிடல் மற்றும் முன்னேற்ற நிர்வாகம்) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் புவி வளங்கள்) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( வனக் கணக்கெடுப்பு மற்றும் புவியியல் தகவல்) | 01 |

| | | | |
|---|---|---|---|
| | | வனப் பாதுகாவலர் ( பல்லுயிர் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களின் பாதுகாப்பு) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( சுற்றுச்சூழல் சுற்றுலா) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( கல்வி மற்றும் இயலளவு விருத்தி) | 01 |
| | | வனப் பாதுகாவலர் ( ஆராய்ச்சி) | 01 |

**02. பதவியுயர்விற்கு முழுமைப்படுத்தியிருக்க வேண்டிய தகைமைகள்.**

| **தொடரிலக்கம்** | **திணைக்களம்** | **பதவி** | **தகைமை** |
|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் | பணிப்பாளர் | தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல் |
| 02 | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | வனப் பாதுகாவலர் ( பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்)<br>வனப் பாதுகாவலர் ( சமூக வனவியல் மற்றும் வன விரிவாக்கல்)<br>வனப் பாதுகாவலர் ( வனவியல் மற்றும் வன நடுகை முகாமைத்துவம்)<br>வனப் பாதுகாவலர் ( திட்டமிடல் மற்றும் முன்னேற்ற நிர்வாகம்)<br>வனப் பாதுகாவலர் ( சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் புவி வளங்கள்) | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பிரதி வனப் பாதுகாவலராக ( வன முகாமைத்துவம்) சேவையாற்றியிருத்தல்.<br><br>குறிப்பு : விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு விசேட தரத்துடைய பதவியொன்றில்லாத சந்தர்ப்பத்தில் I ஆந் தரத்துடைய பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | | வனப் பாதுகாவலர் ( வனக் கணக்கெடுப்பு மற்றும் புவியியல் தகவல்) | |
| | | வனப் பாதுகாவலர் ( பல்லுயிர் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களின் பாதுகாப்பு) | |
| | | வனப் பாதுகாவலர் ( சுற்றுச்சூழல் சுற்றுலா) | |
| | | வனப் பாதுகாவலர் ( கல்வி மற்றும் இயலளவு விருத்தி) | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பிரதி வனப் பாதுகாவலராக (கல்வி) சேவையாற்றியிருத்தல்.<br><br>குறிப்பு : விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு விசேட தரத்துடைய பதவியொன்றில்லாத சந்தர்ப்பத்தில் I ஆந் தரத்துடைய பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். |
| | | வனப் பாதுகாவலர் ( ஆராய்ச்சி) | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் பிரதி வனப் பாதுகாவலராக (ஆராய்ச்சி) சேவையாற்றியிருத்தல்.<br><br>குறிப்பு : விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு விசேட தரத்துடைய பதவியொன்றில்லாத சந்தர்ப்பத்தில் I ஆந் தரத்துடைய பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். |

**03. தேர்ந்தெடுக்கப்படும் முறை:**

(i) சேவை மூப்புநிலை மற்றும் திறன் அடிப்படையில் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால், அந்த ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் புள்ளி வழங்கும் நடைமுறைக்கு ஏற்ப புள்ளி வழங்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று

நடைபெறும்.வெற்றிடங்களை பூரணப்படுத்தல் தொடர்பான இறுதி தீர்மானம் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் உண்டு.

**04. புள்ளி வழங்கும் நடைமுறை:**

| **பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்பு** | **அதிகபட்ச புள்ளி அளவு** | **மொத்தப் புள்ளி அளவு** |
|---|---|---|
| **1. சேவை மூப்புநிலை** | | **70** |
| I. 1. இலங்கை விஞ்ஞான சேவையில் முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவை காலத்திற்கான புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>பொதுச் சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை: 01/2019 இன் படி ஒவ்வொரு திணைக்களத்தின் அதிஉயர் சேவைக காலத்துடன் கூடிய உத்தியோகத்தருக்கு அதிகபட்ச புள்ளிகளையும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அதே விகிதாசாரத்தில் புள்ளிகளும் வழங்கப்படும். | 70 | |
| **2. திறமை** | | **30** |
| 2.1. துறையுடன் தொடர்புடைய தனியாக மற்றும் குழு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள ;<br><br>I. ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள் (Research Publication) - 05 புள்ளிகள் வீதம் (குழு ரீதியான வெளியீடுகளாயின் குறித்த உத்தியோகத்தரின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வெளியீடுகள் என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்).<br>( அதிகபட்சம் 2 வெளியீடுகளுக்காக)<br><br>II. ஆய்வுக் கட்டுரைகள் - 03 புள்ளிகள் வீதம் ( க.வே: இரண்டாம் வினைத்திறன்காண் தடை அல்லதுI ஆந் தரத்திற்கு தரமுயர்த்த கருத்திற் கொள்ளப்படும் பட்டப்பின் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரை தவிர்ந்த ஏனைய ஆய்வுக் கட்டுரைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்).<br>(அதிகபட்சம் 2 ஆய்வுக் கட்டுரைகளுக்கு) | 10<br><br>06<br><br>10 | |

| | | |
|---|---|---|
| III. புத்தாக்கங்களும் / கண்டுபிடிப்புக்களும் - 05 புள்ளிகள் வீதம்<br>குறித்த உத்தியோகத்தர்களின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கங்கள் என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.<br>(அதிகபட்சம் புத்தாக்கம் / புதிய கண்டுபிடிப்புக்கள் 2இற்கு)<br><br>IV. பத்திரிகை / சஞ்சிகைக் கட்டுரைகள் - 02 புள்ளிகள் வீதம்<br>(அதிகபட்சம் 2 செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைக்களுக்கு) | 04 | |
| மொத்தப் புள்ளிகள் | | 100 |

05. அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், (இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1877/27 மற்றும் 2014 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள) அப்பிரமாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கு கட்டுப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இல் வெற்றிடங்கள் நிலவுவதாயின் மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

06.கீழ்வரும் மாதிரிப் படிவத்திற்கமைய முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன், பதிவுத் தபாலில் 2023.05.12 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் “செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.” என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது பக்க மேல்மூலையில் "இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், விண்ணப்பப்படிவம் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

07. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுப்பெறும்.

08. விண்ணப்பப்படிவம் www.pubad.gov.lk இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

**ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக**
**செயலாளர்**
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
2023...........................

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

........................................................ திணைக்களத்தின்  இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I

........................................................................ பதவிக்காக விண்ணப்பித்தல்

1. உத்தியோகத்தர் தொடர்பான தகவல்

   i. முழுப் பெயர்: (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):.........................................................................

   .............................................................................................................................

   (உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

   ii. முதலெழுத்துக்களுடன் பெயர்:- (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) Mr./Mrs./Miss :.........................................................................

   .............................................................................................................................

   (உதா: GUNAWARDHANA, H. M. S. K.)

   iii. முழுப் பெயர் (சிங்களத்தில்):.........................................................................

   .............................................................................................................................

   iv. பிறந்த திகதி:.................................................................

   v. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது : வரு.......... மாதம்................திகதி..................

   vi. தேசிய அடையாள அட்டை இலக்கம்  : -................................................

   vii. நிரந்தர முகவரி: ……………………………………………………..

   .............................................................................................................................

   viii. தொலைபேசி இலக்கம் :-அலுவலகம் : .......................... கையடக்க :....................................

   ix. மின்னஞ்சல் முகவரி:…………………………………………………………………

2. பதவி தொடர்பான தகவல் :

   i. தற்சமய சேவை நிலையமும் முகவரியும் :

ii. IIIஆந் தரத்துக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி :-
iii. IIஆந் தரத்துக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி :-
iv. Iஆந் தரத்துக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி :-
v. தற்போது வகிக்கும் பதவி :
vi. அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :-

3. சேவை மூப்புநிலை

| | | |
|---|---|---|
| 01 | விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு இலங்கை விஞ்ஞான சேவையில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம் | |
| 02 | விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் I இல் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம் | |
| 03 | சம்பளமற்ற லீவுகள் பெற்றுள்ளார் / இல்லை என்பது பற்றி ( சம்பளமற்ற லீவுகள் எடுத்திருப்பின் பெறப்பட்ட நாட்களைக் குறிப்பிடவும்) | |

4. துறைக்குரிய தகைமைகள் :

4.1. குறித்த துறையில் ஈடுபாடு காட்டிய விசேட பங்களிப்பு

| ❖ ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள் | விபரம் | குறித்த ஆண்டு |
|---|---|---|
| ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள் | | |
| ஆய்வுக் கட்டுரை | | |
| புத்தாக்கம் / கண்டுபிடிப்புக்கள் | | |
| செய்திக் கட்டுரைகள் | | |

❖ ஆராய்ச்சியின் சுருக்கம் நேர்முகப் பரீட்சை போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**5.** விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்குறிப்பிட்ட தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதுமென இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ..........................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

II ஆம் பகுதி

( திணைக்களத் தலைவரினால் நிரப்புதல் வேண்டும்)

.......................................................................... திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் உத்தியோகத்தரான.................................................................................. திரு / திருமதி / செல்வியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் பிரத்தியேகக் கோவையில் உள்ள தகவல்களின் படி சரியானது/பிழையானது. அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைச் செயற்பாடுகள் எதுவும் இல்லை / உண்டு எனவும், அவ்வாறான செயற்பாடொன்று எதிர்வரும் காலங்களில் எடுப்பதற்கு கருதுவதாகவும் / இல்லை எனவும், விண்ணப்பங்கள் கோரும் திகதிக்கு உடன்முன்னரான 05 வருட சம்பள ஏற்றத்தை உழைத்துள்ளார் / இல்லை எனவும், தயவுடன் அறியத்தருகின்றேன். அவரின் விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்./ செய்யவில்லை.

........................................................

திணைக்களத் தலைவரின் ஒப்பம்

உத்தியோகபூர்வ பதவி முத்திரை

திகதி